கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

IWWRMP

கேள்விகளுக்கான அழைப்பின் இணைப்பு

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

செயற்றிட்ட இலக்கம்: **P166865.** கடன் இல. **IDA-66190-LK/IDA-66210-LK**

இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செலவுகளுக்காக (IWWRMP) கடனொன்றைப் பெற்றுள்ளதுடன்' இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

இந்த இணைப்பானது, 2026 அக்டோபர் 23ஆம் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட, "மேல் மகாவலி நீர்ப்பிடிப்புப் பகுதிக்கான தீயணைப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்" மற்றும் "சோதனை இறைக்கும் அலகு (Test Pumping Unit) மற்றும் அதற்கான துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குதல் – மீள்-கேள்வி" தொடர்பான அசல் கேள்வி அழைப்பினை மாற்றியமைக்கிறது. இந்த இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும், கேள்வி ஆவணத்தின் ஒரு பகுதியாகவும், அதன் விளைவாக உருவாக்கப்படும் ஒப்பந்த ஆவணங்களின் ஒரு பகுதியாகவும் கருதப்படும்.

இல.	வேலை விபரம்	ஒப்பந்த இலக்கம்	குறிப்பு
1.	சோதனை இறைக்கும் அலகு (Test Pumping Unit) மற்றும் அதற்கான துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குதல் – மீள்-கேள்வி (விநியோகக் காலம் - 60 நாட்கள்)	LK-MoMDE-367154-GO-RFB	பிணை முறியின் பெறுமதி: ரூபா 447,000.00 செல்லுபடிக் காலம்: 2027-04-09ஆம் திகதி வரையான 147 நாட்கள் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு: ரூபா 8,000.00 கேள்வி முடிவுறுத்தல்: 2026-11-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு
2	மேல் மகாவலி நீர்ப்பிடிப்புப் பகுதிக்கான தீயணைப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் (விநியோகக் காலம் - 90 நாட்கள்)	LK-MoMDE-573820-GO-RFB	பகுதியான கேள்வி அனுமதிக்கப்படும். கேள்விப் பிணை முறியானது மொத்த கேள்வித் தொகையின் 2% பெறுமதிக்குக் சமமானதாகவிருக்கும். செல்லுபடிக் காலம்: 2027-04-09ஆம் திகதி வரையான 147 நாட்கள் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு: ரூபா 18,000.00 கேள்வி முடிவுறுத்தல்: 2026-11-13ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கேள்விதாரர்களின் தகைமை திருத்தப்பட்டுள்ளது.

கேள்வி முன்னோடிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் கேள்வி மதிப்பீட்டுக் குழுவின் (BEC) பரிந்துரையின் அடிப்படையில், 1ஆம் இலக்க ஒப்பந்தம் மற்றும் 2ஆம் இலக்க ஒப்பந்தம் ஆகியவற்றிற்கான கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் முறையே 2026-11-13ஆம் திகதி பி.ப. 2.00 மற்றும் பி.ப. 3.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கேள்விகள் அதற்குப் பிறகு உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி ஆவணங்களை வழங்கும் காலம் 2026-11-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை மட்டுமேயாகும்.

2ஆம் இலக்க ஒப்பந்தந்திற்கு (மேல் மகாவலி நீர்ப்பிடிப்புப் பகுதிக்கான தீயணைப்பு உபகரணங்களை கொள்வனவு செய்தல்) பகுதியான கேள்விகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், கேள்விப் பிணை முறியானது சமர்ப்பிக்கப்பட்ட மொத்த கேள்வி விலையில் 2% மாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, 02ஆம் இலக்க ஒப்பந்தத்தில் பங்கேற்கும் கேள்விதாரர்களுக்கான தகுதி நிபந்தனைகளும் திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட தகுதி அளவுகோல்களை https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் பார்வையிட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

செயற்றிட்டப் பணிப்பாளர்,
ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,
2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம்,
இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு 07.
2026-11-06.